**இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்தினக்கல், ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவனத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

---

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக

உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது மூலதன நிதி ஏற்பாட்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 6,562,369 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டு அப்பெறுமதியை மீண்டும் சரிசெய்யாத வகையில் வரிக்கு முன்னரான இலாபத்திலும் சேர்க்கப்பட்டிருந்தது. இதனால் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாடுகளின் கீழ் உருவான காசுப்பாய்ச்சல் அந்த அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் Cash Folow from Operating activity இன் கீழுள்ள பெறுமதியானது ரூபா 6,339,649 ஆகும். Capital Investment Expenses ஆக ரூபா 6,562,368.77 தொகை நீக்கப்பட்டு Net Surplus பெறுமதியான ரூபா 6,339,649 இலாப நட்ட கணக்கில் பதியப்பட்டிருந்தது. எனினும் இந்த பெறுமதி Non Cash Movement தொகுதியில் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தமையால் மீண்டும் இலாபத்தில் சேர்க்கப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தமையை அறியத்தருகின்றோம். எனினும் இந்தத் தொகையை மீண்டும் Investment Activities இன் கீழ் Other Nature Capital Expenses ஆக அகற்றப்பட்டிருந்தமையினால் காசுப்பாய்ச்சல் கூற்றில் தாக்கம் ஏற்படாதிருந்தமையை அறியத்தருகின்றோம். | சரியான பெறுமதியை கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) முன்னைய ஆண்டின் போது மோட்டார் வாகனங்கள் கணக்கில் மீதி ரூபா 1,480,624 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்ட மீதி மீளாய்வாண்டின் போதும் சரிசெய்து நிதிக் | 2019 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு நிறுவனத்தின் 09 மோட்டார் வாகனங்களின் கிரயம் கணக்காய்வு அறிக்கையில் ரூபா 50,744,505 ஆக கூறப்பட்ட போதிலும் நிறுவனத்தின் ஐந்தொகையின் பிரகாரம் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகனங்களின் பெறுமதி மேற்கூறப்பட்ட பெறுமதியால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மோட்டார் வாகனங்களின் உள்ளபடியான கிரயம் ரூபா 522,225,130 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 9,500,000 கிரயமான மோட்டார் வாகனங்கள் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 4,300,000 தொகையில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு 2020 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு மோட்டார் வாகனக் கணக்கின் மீதி ரூபா 47,025,129 ஆக இருந்ததுடன் அந்த பெறுமதி சரியானதாகும். | |
| (இ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை தேசிய விஞ்ஞான மன்றத்திலிருந்து கிடைக்கப் பெற்ற ரூபா 8,816,392 தொகை மானியமாக காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. அதில் செலவிடப்பட்ட ரூபா 2,225,943 தொகை மீண்டெழும் செலவினமாக கிடைக்கப்பெற்ற மானியத்தில் கழிக்கப்பட்டு மிகுதி தொகையான ரூபா 6,590,449 செலுத்த வேண்டியதாக பிழையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | தேசிய விஞ்ஞான மன்றத்தின் மூலம் நிதி கையளித்தலாக பெறப்பட்டது கலண்டர் வருடத்திற்காக இல்லை. அதன் பிரகாரம் தேசிய விஞ்ஞான மன்றத்திலிருந்து கிடைத்த ஆரம்ப பணத்தின் பெறுமதி மானியமாக உரிய தொகை கிடைத்ததாக ஆண்டின் போது கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் பணம் ஈடுபடுத்தப்பப்படுகின்ற முறையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் சீராக்கங்களை மேற்கொண்டு மீதிப் பணம் மாத்திரம் இரண்டு தடவைகள் பதியப்பட்டு கணக்குகளில் சீராக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ரூபா 6,590,449 தொகையான இறுதி மீதி செலுத்த வேண்டிய தொகையாக காண்பிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஈ) | அரசாங்கத்தின் மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்காக ஆண்டின் பெறுமானத்தேய்வு செலவினங்களுக்குரிய பிற்போட்ட வருமானமாக | பதிலளிக்கப்படவில்லை. | சரியான பெறுமதியை காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ரூபா 1,328,811 இனால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 772 | 2019 ஆம் ஆண்டின் மெய்மையாய்வுச் சபையின் பரிந்துரையின் பிரகாரம் விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய 333 நிலையான சொத்து விடயங்களை அகற்றி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டிற்குரிய இருப்பு மெய்மையாய்வு நடவடிக்கைகள் 2020 மார்ச் மாதம் அளவில் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் நாட்டில் உருவாகியிருந்த Covid 19 தொற்றுநோயின் இடையே அலுவலகம் மூடப்பட்டிருந்தமை மற்றும் பயணத் தடைகள் விதித்ததன் மூலம் உரிய பணிகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. எனினும் 2020 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையால் விற்பனைக்காக உள்ள பொருட்களின் பட்டியலும் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஏலமிடப்பட வேண்டிய பொருட்களுக்குரிய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை அறியத்தருகின்றோம். | மெய்மையாய்வு சபையின் பரிந்துரைகளின் பிரகாரம் சொத்துக்களை விரைவாக விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதி 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி, கிரயம், சேர்க்கப்பட்டவைகள், அகற்றப்பட்டவைகள், மீள்மதிப்பீட்டு பெறுமதி மற்றும் பெறுமானத் தேய்வினை காண்பிக்கின்ற பிரகாரம் முறையானதாக நிலையான சொத்துப் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்ளவில்லை. நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி, கிரயம், GRN இலக்கம், அகற்றுதல் போன்றவற்றுக்குரிய விபரங்களை உள்ளடக்கி நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணிச் செல்லப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். | நிலையான சொத்துப் பதிவேடு முறையான பிரகாரம் பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,339,649 மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,111,440 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 11,451,089 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு கொவிட் 19 தொற்றுநோயின் தாக்கத்தினால் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் உரியவாறு அமுல்படுத்தப்படாமை, ஆராய்ச்சிகள் செலவினங்கள் குறைவடைந்தமை, இரத்தினக்கல் இல்லக் கண்டறிதல் மற்றும் மதிப்பீட்டு செயற்திட்டங்களுக்காக ஏற்பட்ட செலவினம் குறைவடைந்தமை மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் குறைவடைந்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

| வருமானம் | 2020 | 2019 | அதிகரிப்பு / குறைவு சதவீதம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | |
| பயிற்சி பாடநெறிகளுக்கான பெறுவனவு | 4,680,000 | - | 100 | பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக கல்வி அமைச்சிலிருந்து பெறுவனவு |
| நானாவித வருமானம் | 1,042,833 | 1,690,025 | (38) | மாணவர்களினை பதிவு செய்தல் வருமானம் குறைவடைந்தமை |

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதன வருமானம் திறைசேரி | 29,536,913 | 35,622,795 | (17) | கிடைத்த நிதி ஏற்பாடு குறைவடைந்தமை |
| செலவினம் ----------------- | | | | |
| ஆராய்ச்சி செலவினம் மற்றும் இரத்தினக்கல் இடத்தைக் கண்டறிதல் மற்றும் மதிப்பீட்டு செயற்திட்ட செலவினம் | 724,708 | 3,577,512 | (80) | கொவிட் 19 தொற்று நோய் தாகக்ததினால் உரிய பணிகளை சரியான பிரகாரம் செய்ய முடியாமையினால் செலவினங்கள் குறைவடைந்தமை |
| பயிற்சி நிகழ்ச்சித் திட்ட செலவினங்கள் | 530,092 | 1,995,303 | (74) | - மேற்படி - |
| பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை அபிவிருத்தி செய்யும் நிகழ்வை பகிரங்கப்படுத்தல் | 533,697 | 2,494,951 | (79) | - மேற்படி - |
| வெளிவாரி விரிவுரைக் கட்டணம் | 1,031,800 | 2,565,195 | (60) | - மேற்படி - |

## 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

| | 2020 | 2019 | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் | 4.97:1 | 7.04:1 | செலுத்த வேண்டிய செலவினங்கள் ரூபா 3.52 மில்லியனால் அதிகரித்தமை. |
| விரைவுச் சொத்து விகிதம் | 4.44:1 | 5.68:1. | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இரத்தினக் கற்களின் பெறுமதியை அதிகரிப்பதற்காக புதிய தொழில்நுட்ப முறைமை தொடர்பாக ஆய்வொன்றை அறிமுகப்படுத்துவதன் கீழ் | இந்த செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக இரண்டு நிறுவனங்களுக்கிடையே கையொப்பம் இடுவதற்கான புரிந்துணர்வு | உரிய ஆராய்ச்சிகளை விரைவாக ஆரம்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கெவுட வெப்பமேற்றி பட்டை தீட்டுதலுக்காக பயன்படுத்தப்படுகின்ற லக்மினி அடுப்பை பழுதுபார்த்தல், பெறப்படும் பத்மராகங்களுக்காக சிப்பு கெவுட மற்றும் மஞ்சள் இரத்தினம் கண்டறிதல் முறை, ஆராய்ச்சி மேற்காள்ளும் டுவர் மெலய்ன் செயற்பாடு மற்றும் ஓபல் அடிப்படையில் கிரேமா செயற்பாடு தொடர்பான ஆய்விற்காக மீளாய்வாண்டில் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | உடன்படிக்கையின் வரைவு செய்யப்பட்டு அந்த நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்கு தாக்கம் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் இந்த உடன்படிக்கை கையொப்பமிடுவதற்குரிய ஆராய்ச்சி நடவடிக்கைகளை விரைவாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாகவும் செயற்திட்ட மூலதன செலவினங்கள் எதிர்பார்த்த காலப்பகுதியில் கிடைக்கப் பெறாமையின் அடிப்படையிலும் அதனை எதிர்பார்த்த பிரகாரம் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | |
| (ஆ) | நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவினால் 2017-2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 04 புதிய கண்டுபிடிப்புக்களுக்காக நிறுவனம் ரூபா 1,422,306 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் புதிய கண்டுபிடிப்புக்களை சந்தைக்கு அறிமுகப்படுத்தி வருமானத்தை உழைப்பதற்கும் அந்த உற்பத்திகளை தேவையான தரப்பினருக்கு பயன்படுத்துவதற்காக வழங்குவதற்கும் வேலைத் திட்டமொன்று திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்க | இந்த செயற்திட்டத்திற்கு உரியதாக மேற்கொள்ளப்பட்ட புதிய கண்டுபிடிப்புக்களுக்காக பேடன்ட் அனுமதிப்பத்திரம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளதுடன் தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் மூலம் அந்த பேடன்ட் அனுமதிப்பத்திரம் மீளாய்வு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்குரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த புதிய கண்டுபிடிப்புக்கள் புலமைச் சொத்துக்களாக இருந்ததுடன் பேடன்ட் அனுமதிப்பத்திரம் இன்றி அவற்றை சந்தைக்கு அறிமுகப்படுத்தி வருமானத்தை உழைப்பதற்கு முடியாதிருந்தது. பேடன்ட் | புதிய கண்டுபிடிப்புக்களை சந்தைக்கு அறிமுகப்படுத்தி வருமானத்தை உழைக்கக் கூடிய வகையில் வேலைத்திட்ட மொன்றை தயாரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வில்லை. | அனுமதிப்பத்திரம் கிடைத்த பின்னர் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஊடாக குறித்த நியதிகளின் கீழ் அந்த புத்தாக்கங்களை வணிகமயப்படுத்தி உற்பத்திக்காக பொருத்தமான தரப்பினருக்கு வழங்குவதற்காக பொருத்தமான வேலைத் திட்டமொன்று தயாரிப்பதற்கும் அதன் மூலம் வருமானத்தை உழைப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக புத்தாக்கங்கள் தொடர்பாக தொழில்நுட்ப அறிவு எமது செயலமர்வுகள் மற்றும் பாடநெறிகள் ஊடாக தொடர்ந்தும் இரத்தினக்கல் மற்றும் ஆபணரத் துறைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு வழங்கப்படுவதுடன் அதன் மூலம் அவர்கள் புதிய புத்தாக்கங்கள் தொடர்பான தொழில்நுட்ப அறிவு விருத்தி செய்யப்படுகின்றது. | |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கையில் இரத்தினக்கல் இல்லத்தைக் கண்டறிதல் மற்றும் மதிப்பீட்டு செயற்திட்டம் (2031-2008) | | |
| நிறுவனத்தில் இருக்கின்ற பதவியணியினருக்கு மேலதிகமாக 22 ஊழியர்களும் ஒரு ஆலோசனையாளரும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்கு 2018 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போதும் | தற்போது நிறுவனத்திற்கு சொந்தமாக செயற்திட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக் கூடிய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மூன்று பேர் மாத்திரமே இருக்கின்றனர். அவர்களில் இரண்டு பேரினால் இதில் குறிப்பிடப்பட்ட எஹெலியகொட, பெல்மதுல்ல போன்ற பிரிவுகளின் | அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் திட்டமிடல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அதற்காக ஆட்சேர்ப்பு செய்யப்படாமல் 5 பட்டதாரி பயிலுனர்கள் சேர்க்கப்பட்டு செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. முதலாவது கட்டத்தின் கீழ் 05 மாவட்டங்களின் 50 பிரதேச செயலகங்களில் இரத்தினக்கல் காணப்படுகின்ற வரைபடம் நிர்மாணிக்கப்பட்டு இறுதி அறிக்கை விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 08 பிரதேச செயலகங்களுக்குரிய வரைபடம் நிர்மாணிக்கப்பட்டு இறுதி அறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. 38 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய கண்டறியும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. ஆரம்பிக்கப்பட்ட தனமல்வில, கதிர்காமம், குருவிட்ட மற்றும் இரத்தினபுரி போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளுக்காக இரத்தினக்கல் காணப்படும் வரைபடம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் மூலம் இனங்காணப்பட்ட இரத்தினக்கல் காணப்படும் என கருதப்படுகின்ற 05 பிரதேசங்களில் குறித்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைக்கு அனுப்பப்பட்ட போதிலும் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும் இனங்காணப்பட்ட காணிகளில் ஏலமிட்டு பெறப்பட்ட வருமானத்தில் 25 சதவீதத்தை பெற்றுக் கொள்வதற்கும், இரத்தினக்கல் காணப்படுகின்ற வரைபடங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கின்ற வருமானத்தில் ரூபா 176.15 மில்லியனை ஈடுபடுத்தி செயற்திட்டத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது செயற்பாடுகளை மேற்கொண்டு அறிக்கைகள் மற்றும் வரைபடங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது. இரத்தினபுரி மற்றும் குருவிட்ட பிரிவுகளின் நடவடிக்கைகள் 2020 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட போதிலும் 2019 ஆம் ஆண்டில் செயற்திட்டத்திற்காக திறைசேரி நிதிஏற்பாடு கிடைப்பனவு 2019 இன் இரண்டாம் காலாண்டுவரை தாமதடைந்தமையினால் எஹலியகொட மற்றும் பெல்மதுல்ல பிரிவின் நடவடிக்கைகள் 2019 இரண்டாம் காலாண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையினால் நீண்டகாலமாக நாடு மூடப்பட்டமையின் காரணமாக இந்த செயற்திட்ட துறைகளின் பிரதேசங்களில் ஆய்வுகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. புதிய இரண்டு பிரிவுகளின் நடவடிக்கைகளும் உரிய காலத்தில் ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. இந்த செயற்திட்ட பதவியணியினரை சேர்த்துக் கொள்வதற்கான நிதிஏற்பாடு மற்றும் அங்கீகாரம் அமைச்சு ஊடாக விண்ணப்பிக்கப்பட்டு மீண்டும் மீள்நினைவூட்டலும் அனுப்பப்பட்ட போதிலும் இதுவரை நிதிஏற்பாடு மற்றும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையுடன் ஒன்றிணைந்து மேற்கொள்ளுவதற்கு திட்டமிடப்பட்டு பூர்த்தியாகிய செயற்திட்டத்தின் பின்னர் இந்த செயற்திட்டம் ஊடாக இரத்தினக்கல் காணப்படுகின்ற வரைபடங்களின் பொருத்தமான காணிகளின் அகழ்வுக்காக

| | | |
|---|---|---|
| கட்டங்களை அமுல்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் 02 நிறுவனங்களுக்கு இடையிலான தொடர்புகள் காணப்படாமையினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் இதுவரை பயன்கிடைத்திருக்கவில்லை. | ஏலமிடுவதற்கான நடவடிக்கைகளை செய்வதற்கும் அந்த ஏலத்தின் பின்னர் கிடைக்கின்ற வருமானத்தில் 25 சதவீதம் இந்த நிறுவனத்திற்கு வழங்குதல் தொடர்பாக இணக்கப்பாடு கைச்சாத்திடப்பட்டிருந்தது. தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை சட்டத்தின் கீழ் எமது நிறுவனம் தாபிக்கப்பட்ட போதும் இரண்டு நிறுவனங்களுக்கிடையே சிறந்த தொடர்பு காணப்படாமையின் அடிப்படையில் அந்த ஆராய்ச்சி விளைவுகளை கைத்தொழில்களுக்கு அனுப்புவதில் பிரச்சினை காணப்பட்டது. இது தொடர்பாக அமைச்சும் முன்வந்து கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. அதன் பிரகாரம் கைத்தொழிலின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக எமது நிறுவனத்தின் விளைவுகள் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை ஊடாக கைத்தொழிலுக்கு வழங்குவதற்கு இந்த செயற்திட்டத்திற்காக எதிர்காலத்திற்கு தேவையான ரூபா 176.15 மில்லியன் பங்களிப்பு செயற்திட்டத்தின் பிரதிபலனாக வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. | |

## 3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பெறுகை பணிகளுக்காக ரூபா 8.62 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்ட போதிலும் அந்த நிதியேற்பாட்டை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை | ஏற்றுக்கொள்ளவில்லை. மீளாய்வாண்டின் போது சொத்துக்களை கைப்பற்றுவதற்காக ரூபா 18.25 மில்லியன் அன்றி ரூபா 8.3 மில்லியன் மாத்திரம் | ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை உரிய காலப் பகுதியில் பெற்றுக் கொள்வதற்கும் அந்த நிதியினை |

| | | |
|---|---|---|
| எடுக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டின் போதும் பெறுகை பணிகளுக்காக ரூபா 22.6 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதுவும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஒதுக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த மூலதன பாதீடும் ரூபா 19 மில்லியன் ஆகும். எனினும் ரூபா 500,000 தொகைக்கு மேற்பட்ட மூலதன செலவினங்களை செய்வதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு (Concurrence) பெறப்பட வேண்டியிருந்ததுடன் ரூபா 19.00 மில்லியனுக்காக செலவின அங்கீகாரம் நிறுவனத்திற்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. அந்த Concurrence கடிதத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக கொள்வனவு செய்வதற்காக எந்தவொரு நிதியேற்பாடும் அங்கீகரிக்கப்படாமையின் அடிப்படையில் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இரத்தினக்கல்லை அழகுபடுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தினால் ரூபா 10,977,344 தொகை செலவில் மின் அடுப்பு கொள்வனவு செய்யப்பட்டு 06 வருட காலமாக பயனற்று காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது இந்த அடுப்பின் சேவைகளை வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக விழாச் செலவினம் ரூபா 559,462 தொகை மற்றும் மின் அடுப்பை ஸ்தாபித்தல் மற்றும் உதிரிப்பாகங்கள் மற்றும் மின் | இந்த மின் அடுப்பு 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் கொழும்பு பிரதான அலுவலகத்திற்கு எடுத்துச் செல்வதற்கு இரத்தினபுரி பிரதேசத்தின் பிரதிநிதிகளால் ஏற்படுத்தப்பட்ட எதிர்ப்பின் அடிப்படையில் அடுப்பை ஸ்தாபிப்பதற்காக பொருத்தமான இடமொன்றை பெற்றுக்கொள்ளல், அடுப்பிற்கு தேவையான | நிறுவனத்தினால் இதற்காக அதிக செலவினம் செய்யப்பட்டுள்ளமையால் விரைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒழுக்குகளை விருத்தி செய்வதற்காக மேலும் ரூபா 2,941,038 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் மின் அடுப்பு நீண்டகாலம் பயன்படுத்தப்படாமையின் காரணமாக அதிக பழுதுபார்த்தல் செலவினங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. | மின்சாரத்தை வழங்குதல், மின்சார ஒழுக்குகளை தயாரித்தல், உரிய மின்சார பாதுகாப்பு முறைமையினை தயாரித்தல் மற்றும் மின் பிறப்பாக்கி இயந்திரங்களை பெற்றுக் கொள்ளல் போன்ற நடவடிக்கைகளுக்காக கவனத்தில் கொள்ள வேண்டிய காலமொன்று ஏடுத்தமையால் அடுப்பை எதிர்பார்த்த ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. எனினும் அந்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்து 2020 ஆம் ஆண்டு முதல் எதிர்பார்த்த ஆராய்ச்சி பட்டை தீட்டும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மின்சார அடுப்பை ஸ்தாபித்து பிரதேசத்தில் காணப்படுகின்ற மின் தாக்கத்தின் ஊடாக மின் ஒழுக்கு மற்றும் அடுப்பின் உதிரிப் பாகங்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருந்தன. இந்த பழுதுபார்த்தல் பூர்த்தி செய்யப்பட்டு பொருத்தமான மின்தாக்க பாதுகாப்பு முறைமை தாபிக்கப்பட்டு இந்த அடுப்பு தற்போது செயற்படு நிலையில் காணப்படுவதுடன் இதுவரையில் அமுல்படுத்தப்பட்ட அதிக பயணத்தடை விதிக்கப்பட்ட சந்தர்ப்பம் வரையிலும் இந்த அடுப்பு ஆராய்ச்சி பட்டை தீட்டும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | |
| (ஆ) | நிறுவனத்திற்குச் சொந்தமான கொள்விலை ரூபா 344,690 | முச்சக்கர வண்டியை பழுதுபார்த்து | பழுதுபார்க்கப்பட்டு விரைவாக |

| | | |
|---|---|---|
| பெறுமதியான முச்சக்கர வண்டி பழுதுபார்க்கப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமல் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிறுவன வளவில் தரித்து வைக்கப்பட்டிருந்தது. நீண்ட காலமாக ஓட்டத்தில் ஈடுபடுத்தாமையின் காரணமாக வாகனத்தின் சேவை நடவடிக்கைகளுக்காக மேலதிக செலவினமொன்றை செலவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. | நிறுவனத்தின் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டின் போது ஆரம்பமான Covid 19 தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டின் போது நிறுவனத்திற்கு போதியளவான நிதியேற்பாடு கிடைக்காமையின் அடிப்படையில் அந்த பணியை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. தற்போது தொழில்நுட்ப மாதிரியொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் தேவையான பழுதுபார்த்தல்கள் சரியான பிரகாரம் நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய விஞ்ஞான மன்றத்தில் ரூபா 10,481,088 நிதி உதவியுடன் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்டிருந்த இரத்தினக்கல் வர்ணம் தீட்டுதல் மற்றும் தெளிவினை அதிகரித்தல் மிகவும் ஆக்கபூர்வமானதும் செயற்திறனானதுமான முறைமையொன்றை அறிமுகப்படுத்தும் செயற்திட்டத்திற்காக கிடைக்கப் பெற்ற நிதிஏற்பாடுகளில் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,479,445 செலவிடப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் 04 தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மதிப்பீட்டுத் தொகை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது தேசிய விஞ்ஞான மன்றத்திலிருந்து கிடைக்கின்ற நிதி உதவியை பயன்படுத்தியும், மிகுதி பணம் எமது நிறுவனத்தினால் செய்வதற்கும் அந்த முன்மொழிவில் | தேசிய விஞ்ஞான மன்றத்துடன் ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

2021 சனவரி 21 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய செயற்திட்டம் கணக்காய்வு வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட வேண்டிய மதிப்பீட்டு பெறுமதி ரூபா 1,130,000 தொகையான Pressure Vessel இயந்திரம் மீளாய்வாண்டின் போதும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்ற வேண்டிய Oiling, Impregnation, Woxing, Diffusion, Glass Filling மற்றும் Bleaching போன்ற பணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே செயற்திட்டத்திற்காக தொழில்நுட்ப உதவியாளர் ஒருவரும், தொழிலாளர் ஒருவரும் சேர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த ஊழியர்கள் சேர்க்கப்படாமல் ஆராய்ச்சி மாணவர் ஒருவர் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தார். ரூபா 4,150,000 தொகையில் கொள்வனவு செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட 03 தொழில்நுட்ப உபகரணங்கள் 2018-2020 காலப்பகுதியில் நிறுவனத்தினால் ரூபா 9,101,341 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மதிப்பீட்டை விஞ்சி செலவிடப்பட்ட ரூபா 4,951,341 தொகை தேசிய விஞ்ஞான மன்றத்திலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர் அவை எமது நிறுவனத்தின் சொத்துக்களின் கீழ் கொண்டு வரப்பட்டமையினால் அந்த உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது தேசிய விஞ்ஞான மன்றத்தின் நிதி உதவிக்கு மேலதிகமாக தேவையான ரூபா 4,951,342 செலவினம் எமது நிறுவனத்தினால் செலவிடப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் அந்த தொகை தேசிய விஞ்ஞான மன்றத்திலிருந்து மீளளிப்புச் செய்யப்படாதிருந்ததுடன் அந்த உபகரணங்கள் நிறுவனத்தின் ஏனைய ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காகவும் தற்போதும் எதிர்காலத்திலும் பயன்படுத்தப்படுகின்றது.

செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் தொழிலாளர் பதவிகளுக்காக ஊழியர்கள் சேர்க்கப்பட்ட போதிலும் தேசிய விஞ்ஞான மன்றத்திலிருந்து அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த படிகள் காணப்படுகின்ற வாழ்க்கைச் செலவினங்களுடன் இணங்காதிருந்தமையினால் அந்த ஊழியர்கள் சேவையை விட்டுச் சென்றிருந்தனர்.
Pressure Vessel உபகரணம் தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் செயற்திட்டத்தின் இறுதி அறிக்கையும் தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு வழங்கப்பட்டு செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப உதவியாளர்

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் தொழிலாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட போதிலும் தேசிய விஞ்ஞான மன்றத்திலிருந்து அதற்காக ஒதுக்கப்பட்டிருந்த படிகள் காணப்படுகின்ற வாழ்க்கை செலவுடன் இணங்காதிருந்தமையால் அந்த ஊழியர்கள் சேவையை விட்டுச் சென்றிருந்தனர். மீண்டும் மீண்டும் அந்த ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதன் காரணமாக குறுகிய காலத்தில் அவர்கள் சேவையை விட்டுச் சென்றிருந்தனர். | |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டு முதல் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையிலிருந்து வழங்கப்பட்டிருந்த ரூபா 25,357,200 தொகையான நிதியேற்பாட்டின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்ட வறுமையை ஒழிக்கும் செயற்திட்டத்தின் கீழ் இரத்தினக்கல் மற்றும் ஆபரண கைத்தொழிலுக்காக தொழில்நுட்ப வடிவமைப்பாளர்கள் 1000 பேருக்கு பயிற்சியளிப்பதற்காக நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்காக 2015-2018 காலத்தில் 805 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். அதில் 255 பேர்கள் பயிற்சியினை பூர்த்திசெய்திருக்கவில்லை. பாடநெறிக்காக ஏற்பட்ட செலவினமான ரூபா 3,577,395 தொகை தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபையிலிருந்து மீளளிப்புச் | மின்சார அடுப்பிற்காக மின்சார ஒழுக்குகளை தயாரிப்பதற்கு செலவிடப்பட்ட தொகையை மீளளிப்புச் செய்வதற்காக இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மின் அடுப்பு செயற்படு நிலையில் கொண்டு வந்ததன் பின்னர் தொடர்ச்சியாக தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அவர்கள் அதற்கான நடவடிக்கைகள் எடுக்காதிருந்ததுடன் இறுதி தடவையாக 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு இடையிலும் சென்று பரீட்சிக்குமாறு அறிவித்தல் வழங்கப்பட்ட போதிலும் அதற்கு சாதகமான பதில் கிடைத்திருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வறுமையை ஒழிக்கும் செயற்திட்டத்தின் கீழ் தேசிய இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகார சபையில் மீளளிப்புச் | இரண்டு நிறுவனங்களுக்கு இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செய்யப்பட்டிருக்கவில்லை. மின்சார அடுப்பு ஸ்தாபிப்பதன் மூலம் பிரதேசத்தின் மக்களின் இரத்தினக்கல் பட்டை தீட்டும் வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் வருமானத்தை உழைப்பதற்கு முடியாமையின் காரணமாக செலவினங்களை மீளளிப்புச் செய்துகொள்வதற்கு முடியாதிருந்ததாக இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை அறிவித்திருந்தது.

செய்யப்பட வேண்டிய பணம் ரூபா 3,577,395 தொகை சரியானதாகும். செயற்திட்டத்தின் மாணவர்களுக்கு பரிசீலனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்களுக்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 884,500 இனை மீளளிப்புச் செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கை தற்போது தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த ரூபா 884,500 தொகையை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

பயிலுனர்கள் பாடநெறியை விட்டுச் செல்லல் சராசரியாக 20 சதவீதத்திற்கும் 30 சதவீதத்திற்கும் இடையில் காணப்பட்டது. இந்த பாடநெறியை விட்டுச் செல்லும் போக்கை கட்டுப்படுத்துவதற்காக நிறுவனம் உபாய வழிகளாக முக்கியமானது என இனங்காணப்பட்ட பிரகாரம் பயிற்சி பாடநெறி விடயங்களில் பரிந்துரை செய்யப்பட்ட தற்போதைய சந்தைக்கு தேவையான பிரகாரம் அபிவிருத்தி செய்தல், பாரம்பரிய முறைகளுக்கு புறம்பாக நவீன கற்பித்தல் முறைகளை பயன்படுத்துதல், நவீன கல்விசார் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

### 3.6 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆராய்ச்சி மற்றும் பாடநெறிகளை நடாத்துவதற்காக போதியளவான இடவசதிகள் காணப்படாத கட்டிடமொன்றின் 02 மாடிகள் மாதத்திற்கு ரூபா 1,000,000 தொகையில் 2017 ஆம் ஆண்டு வாடகைக்கு பெறப்பட்டு பிரதான அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. இந்த கட்டிடம் வெடித்திருந்தமை, நீர் கசித்திருந்தமை, உடைந்திருந்தமை மற்றும் விரிவான பிளவுகளை காணக்கூடியதாக இருந்ததுடன் இந்த கட்டிடத்தில் அலுவலகத்தை நடாத்திச் செல்லுதல் பொருத்தமற்றது என கட்டிடம் தொடர்பாக பரீட்சிப்பதற்கு நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப குழுவினாலும் அறிக்கையிடப்பட்டிருந்தது. வாடகைக்கு பெறப்பட்ட கட்டிடத்திற்கு தரச் சான்றிதழ் (COC) வழங்கப்படாதிருந்ததுடன் கட்டிடத்தை நிர்மாணிக்கும் போது மாநகர சபை வழங்கிய பரிந்துரைகள் மீறப்படும் வகையில் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சட்ட ரீதியாக பயன்படுத்துவதற்கு முடியாதிருந்த கட்டிடம் ஒன்று வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். மாலபே அலுவலகத்திலிருந்து வேறு இடத்திற்கு பிரதான அலுவலகத்தை கொண்டு செல்வதற்காக முன்னாள் தலைவரின் பங்குபற்றலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட போதும் அந்த தவறை சரிசெய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நிறுவனத்திற்கு புதிய கட்டிடமொன்றை வழங்குவதற்காக இந்த சந்தர்ப்பத்தின் போது செயற்படுவதுடன் அதில் நிறுவனத்தின் பாடநெறி மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளை நடாத்துவதற்காக போதியளவான இடவசதிகளுடன் கட்டிடமொன்றை பெற்றுக் கொள்வதற்காக தேசிய போட்டியாளர் கேள்வி கோரல் மூலம் கேள்வி கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை மேலும் அறியத்தருகின்றோம். | பாடநெறி மற்றும் ஆராய்ச்சிகளை நடாத்துவதற்கு இடவசதிகள் உள்ள இடமொன்றில் அலுவலகம் நடாத்திச்செல்லப்பட வேண்டியிருந்ததுடன் அபாயகரமாக உள்ள இடத்தில் விரைவாக விலகிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.7 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் சிரேஷ்ட நிலையில் 15 பதவிகள், மூன்றாம் நிலையில் 06 பதவிகள், இரண்டாம் நிலையில் 34 பதவிகள் மற்றும் ஆரம்ப நிலையில் 06 | நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையான 136 இல் 78 பேர் மாத்திரம் சேவையில் | நிறுவனத்தில் தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களுக்காக தேவையான |

பதவிகளையும் உள்ளடக்கிய மொத்தமாக 61 பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டன. அதில் பணிப்பாளர் (ஆராய்ச்சி) பதவி 2011 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்படுவதுடன் அதற்கான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சிரேஷ்ட ஆராய்ச்சி (வர்ணங்களை மெருகூட்டுதல்), சிரேஷ்ட ஆராய்ச்சி (புத்தாக்கம்), 08 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மற்றும் 04 விரிவுரையாளர்களின் வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பயிற்சி பிரிவுக்காக நிரந்தர விரிவுரையாளர்களை சேர்த்துக் கொள்வதற்கு பதிலாக வெளிவாரி விரிவுரையாளரினதும் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களினதும் சேவை தொடர்ச்சியாக பெறப்பட்டிருந்தது.

ஈடுபட்டிருந்ததுடன் வெற்றிடங்களின் எண்ணிக்கை 61 ஆகும். 2011 ஆம் ஆண்டின் போது இந்த பதவியணியினர்களின் எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட போதும் முழுமையாக பதவியணியினரை சேர்த்துக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. ஆட்சேர்க்கப்பட்ட பதவியணியினரில் கவனத்தில் கொள்ளக் கூடிய அளவில் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் சேவையிலிருந்து விலகிச் சென்றிருந்தனர். கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள முறையில் 10 வருடங்கள் வரை பணிப்பாளர் (ஆராய்ச்சி) பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு நிறுவனத்திற்கு முடியாதிருந்தது. அதற்காக பல்வேறு காரணங்கள் தாக்கமளித்திருந்தன. நிறுவனத்தின் பயிற்சி பதவியணியினரில் பயிற்சி உத்தியோகத்தர் பதவிகள் 10 நீக்கப்பட்டு புதிய 10 பதவிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இந்த புதிய பதவிகளாக 04 விரிவுரையாளர்கள் மற்றும் 06 சிரேஷ்ட பயிற்சி உத்தியோகத்தர்கள் உள்ளடங்கியிருந்தனர். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அந்த பதவிகள் 2018 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் பதிதாக ஏற்படுத்தப்பட்ட சில பதவிகளின் அடிப்படையில் நிதியேற்பாடு வரையறுக்கப்பட்டமையினால் இந்த

பிரகாரம் ஊழியர்கள் சேர்க்கப்பட வேண்டியிருந்ததுடன் விசேடமாக பயிற்சி பிரிவுக்காக நிரந்தர விரிவுரையாளர்கள் விரைவாக சேர்க்கப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | ஆட்சேர்ப்புக்கள் அந்த ஆண்டின் போது மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது, காணப்பட்ட நிதியேற்பாட்டின் கீழ் ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு ஏற்பட்டிருந்தமையினால் மேலும் பயிற்சி பதவியணினர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு காலம் எடுத்திருந்தது. நிறுவனத்திற்கு நிரந்தர பதவியணியினரை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் நிறுவனத்தின் பயிற்சி நடவடிக்கைகளை சரியான பிரகாரம் பேணிச் செல்வதற்காக வெளிவாரி பயிற்சி உத்தியோகத்தர்களின் சேவையை பெற்றுக் கொள்வதற்கு நிறுவனத்திற்கு ஏற்பட்டிருந்தது. எனினும் வெளிவாரி பயிற்சி பதவியணியினருக்காக மேற்கொள்ளப்படுகின்ற மணித்தியால விலை வீதமாக இருந்தமையினால் நிரந்தர பதவியணியினரை விட குறைவான கிரயத்தின் கீழ் இந்த சேவை பெறப்பட்டிருந்தது. | |

## 3.8 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதிவுசெய்யப்பட்டதிலிருந்து 10 வருடங்களை விஞ்சாத போதிலும் ஓட்ட நிலைமையில் காணப்படாத மற்றும் பழுதுபார்த்து பொருளாதார ரீதியில் பயனுடையதாக அல்லாத வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட திகதி முதல் 10 | இந்த வாகனம் பல சந்தர்ப்பங்களின் போது செயற்பாடற்ற நிலையின் அடிப்படையில் பல தடவைகள் பழுதுபார்த்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் தொடர்ச்சியாக பழுதுபார்த்தல்களுக்காக கணிசமான தொகையொன்றை | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பரிசோதகர் ஒருவரினால் இந்த வாகனம் பழுதுபார்க்கப்பட்டதன் பின்னர் பயன்படுத்த முடியும் என 2019 ஆகஸ்ட் 08 ஆந் திகதி பரிந்துரை |

வருடங்களை விஞ்சாதிருந்த ரூபா 975,000 பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்ட வாகனம் மதிப்பீட்டு சபை மூலம் பழுதுபார்க்கப்பட்டதன் பின்னர் பயன்படுத்த கூடியதாக இருந்தது என பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.
அவ்வாறிருக்கும் போது 2009-2016 காலப்பகுதியில் ரூபா 982,844 மேலதிக பழுதுபார்த்தல் செலவினம் ஏற்பட்டிருந்தமையின் காரணத்தைக் காட்டி மதிப்பீட்டு பெறுமதியை விஞ்சி ரூபா 1,612,000 தொகையில் 2020 திசெம்பர் 23 ஆந் திகதி வாகனம் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

செலவிடுவதற்கு ஏற்பட்டமை மற்றும் மீண்டும் மீண்டும் பழுதுபார்த்தல்களை மேற்கொண்டு பயன்படுத்துதல் பொருளாதார ரீதியில் பயனுடையதாக இல்லாதிருந்தமையின் காரணமாக விற்றுத் தீர்க்கப்பட வேண்டுமென அகற்றல் குழு பரிந்துரை செய்திருந்தது. மேலும் மதிப்பீட்டுக் குழுவினால் இந்த வாகனம் ரூபா 975,000 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதில் உள்ள பழுதுபார்த்தல்களையும் கவனத்தில் கொண்டதன் பின்னரே தெரிவிக்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டுக் குழுவினால் பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்க முடியுமென பரிந்துரை செய்திருக்கும் போது இந்த வாகனம் விற்பனை செய்யப்பட்டமை என்ற விடயத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. இதன் போது பழுதுபார்த்து பயன்படுத்துதல் பொருளாதார ரீதியில் பயனுள்ளதா என்பது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது கணக்காய்வினால் தெரிவிக்கப்பட்ட விதத்தில் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்குமாயின் அந்த வாகனத்திற்கு கணிசமான நட்டமொன்று ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும்.

செய்திருக்கும் போது 2019 யூலை 17 ஆந் திகதி விற்றுத் தீர்த்தல் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இந்த வாகனம் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பாக மீண்டும் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும்.